## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 6 |
| Name | : திரு. சங்கர் |
| Father/Husband's Name | : சின்னைய்யன் |
| Village | : பாலூர் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2024.

Accused present.

**முதல் விசாரணை-**

நான் தற்போது பாலூரில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கலைவாணன் எனது நண்பர். கடந்த 31.12.2022 அன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் இருசக்கர வாகனமும், லாரியும் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு விபத்து ஏற்பட்டவரை ஆம்புலன்சில் ஏற்றி அவரது பக்கத்து வீட்டுகாரர் இரவிவர்மன் ஏற்றி அனுப்பிவிட்டதாக கூறினார். அதற்கு பிறகு இரவிவர்மனின் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு நாங்கள் இருவரும் சென்றோம். கலைவாணனுக்கு கால் மற்றும் தலையில் அடிப்பட்டிருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து ஸ்கேன் எடுத்தார்கள். அவர் சிகிச்சையிலிருந்த போது சுமார் இரவு 11.30 மணியளவில் இறந்துவிட்டதாக மருத்துவர்

சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**-

சம்பவத்தை நான் நேரில் பாரக்கவில்லை என்றால் சரிதான். கேள்விப்பட்டு தான் முதலில் எங்கு சென்றேன் என்று கேட்டால் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். அங்கு லாரி நின்று கொண்டிருந்தது. பின்னர் மருத்துவமனைக்கு சென்றேன். காவல் நிலையத்தில் யார் புகார் அளித்தார்கள் என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் அவரது மனைவி அளித்துள்ளதாக சொன்னார்கள். நேரடியாக தெரியாது. சம்பவயிடத்திற்கு நான் செல்லும் போது அந்த இடத்தில் இருசக்கர வாகனம் இருந்ததா என்று கேட்டால் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றதாக கூறினார்கள். எத்தனை மணிக்கு நான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்று கேட்டால் 02.15 மணிக்கு சென்றேன். போலிசார் எத்தனை மணிக்கு இருசக்கர வாகனம் எடுத்து சென்றதாக கேள்விபட்டேன் என்று கேட்டால் அதைபற்றி எனக்கு தெரியாது நான் செல்லும் போது இருசக்கர வாகனம் அங்கில்லை. யாருடைய கவன குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை**- இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

V LAVANYA

Judicial Magistrate No. I,Chengalpattu
Digitally signed by V LAVANYA
Location: Chengalpattu
Date: 2024.07.15 16:38:24 +0530

Judicial Magistrate No.I,
Chengalpattu.